ஓம் கன்னிமூல மஹா கணபதி பகவானே
சரணம் ஐயப்பா

ௐ

# "பஜனாமிர்தம்"



வெளியீடு
கொழும்பு - கொள்ளுப்பிட்டி - அஸ்ரல் கட்டிடத் தொகுதி
9ஆம் மாடியுறை


**ஸ்ரீ தேவி கருமாரி அம்மன்**

**ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்**

## மகர ஜோதிப் பெருவிழா

## 14.01.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொள்ளுப்பிட்டி அஸ்ரல் கட்டிட தொகுதியில் அமைந்த
சபரிமலையின் சானித்திய அமைப்புடைய
18 படிகளுடன் அமைந்த ஸ்ரீ ஐய்யப்ப ஆலய தோற்றம்.

இப் பஜனாமிர்த மலருக்கு உரிய பெரும்
பங்கு செலவை பொறுப்பேற்ற
திரு. ராமநாதன், திரு ராஜு குடும்பத்தினர்க்கு
ஐயன் திருவருள் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஓம் சாமியே சரணம் ஐயப்பா "

# "சமர்ப்பணம்"

மெய் மறையின் நாயகனும்
மேக வர்ண கோகுலனும்
வையமும் வானும் வாழ்வோர் போற்ற
வளநிறை சபரியுறை தெய்வமாய்
ஐயனைத்தந்தனர் எம் குறைகள் தீர
அக மகிழ்வாய் அரிஹரன் அருள்பெற்றே
நையும் மன நலிவகன்றே அவன் புகழ் பாட
நற் "பஜனாமிர்தம்" சாஸ்தாவிற்கே சமர்ப்பணம்


சுபம்

"ஓம் ஜோதிஸ்வ ரூபனே சரணம் ஐயப்பா"

**மலர் தொகுப்பு**

"செஞ் சொற் கவிதா சிரோமணி"
**சிவஸ்ரீ. ராம். தேவ லோகேஸ்வர குருக்கள்**
ஐயப்ப தொண்டன்
**தங்கமுகுந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எங்கள்

குருவின் குருவான

ஐயனிடத்தில் ஐக்கியமான

குருசாமி சு. ரவீந்திரகுமார் சுவாமி

அவர்களுக்கு

எமது மனப்பூர்வமான

வணக்கங்களைத்

தெரிவிக்கின்றோம்.

கொள்ளுப்பிட்டி ஸ்ரீ ஐயப்ப சுவாமி
திருக்கோவில் யாத்திரீகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நுழைவாயில்.................*

முறுவல் பூத்த லாவண்ய முகமும், இரண்டு கால்களையும் மடக்கிய நிலையில் முழந்தாலில் கட்டு போட்ட யோக அமர்வும், ஒரு கை தன்னைச் சரணடைவோரை என்றும் காத்தருள்வேன் என பாதத்தை காண்பிக்க, மறுகரம் சின் முத்திரை காட்டியநிலை. சின் முத்திரையில் தாய்விரல் பரமாத்மாவையும், சுட்டுவிரல் ஜீவாத்மாவையும், நடுவிரல் ஆணவ மலத்தையும், மோதிர விரல் கன்ம மலத்தையும், சிறுவிரல் மாயை என்கின்ற மலத்தையும் குறிப்பதாகும். மும் மலங்களையும் விடுத்து மனிதன் இறையை சரணடைய வேண்டும் என்ற தத்துவத்தைக் காட்டும் நிலையில் ஸ்ரீ ஐயப்ப சுவாமி வீற்றிருக்கின்றார்.

அதுமட்டுமின்றி சிவசக்தியும், விஷ்ணு சக்தியும் சேர்ந்த ஜோதிஸ்வரூபன் " தர்மசாஸ்தா ". "அபிஷேகபிரியோ சிவ" " அலங்காரபிரியோ விஷ்ணு " என்பது வேத வாக்கு. நாராயணனின் காருண்யலாவண்யமும், பரமேஸ்வரரின் சாந்த ஞானமும், ஒன்று சேர்ந்து தோன்றிய ஜோதியின் வடிவே ஹரிஹரன். "விரதம்" என்றாலே ஐம்புலன்களையும் அடக்கி மனதை ஒரு நிலைப்படுத்துதலாகும்.

மற்ற விரதங்களில் இருந்து மாறுபட்டு சற்று கடினமாகவே ஐயனோடு எம் மன நிலையை ஒன்ற வைக்கும் அற்புத விரதம் இந்த சபரிமலை கார்த்திகை மாத மண்டலவிரதம். மற்றவர்கள் சபரிமலை செல்கின்றார்களே நாமும் செல்வோம் என நினைப்பதும், இந்த விரதத்தை சாதரண விரதமாக நினைத்து நடப்பதையும் தவிர்த்து, உண்மையான உள்ளன்போடு விரத கட்டுப்பாடுகளோடும் செல்வோர்களுக்கு அந்த ஐயன் சரண் தந்து காப்பான் என்பதில் ஐயமில்லை. அந்த அற்புத விரதத்தின் ஆனந்தமிகு பஜனைகட்டு, இந்த பஜனாமிர்தமும் பயன்படவேண்டும் என்பதே எமது பிரார்த்தனையாகும்.

" ஓம் சாமியே சரணம் ஐயப்பா "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞானபானு
பிரதிஷ்டா கலாநிதி
வேதாகம கிரியா சூடாமணி
சிவசார்ய
**சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**
ஆதீன குரு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்
22 /5 C, Nandimithra Place
Kirillopone, Colombo 6. T.P : 075 520139


**ஜகத் ப்ரதிஷ்டா ஹேதுர் யதர்ம ச்ருத்யந்த கீர்த்தித:**
**தஸ்யாமி சாஸ்தா யோதேவ: தம் ஸதா ஸமுபாச்ரயே**

உலகம் நிலைத்து நிற்பதற்கு காரணம் தர்மத்தைக் காத்து நிலை நிறத்துகின்றவர் சாஸ்தா. (ஐயப்பன்)

மகர ஜோதி நாள் மிகவும் சிறந்த நன்னாளாகும். மகரசங்கிராந்தி உத்தராயண புண்ய தினம். ஐயப்ப பக்தர்கட்கு ஜோதி தோன்றும் நேரம். மோகினி வடிவு கொண்ட நாராயணனின் அழகும் இறைவனின் (பரமேஸ்வரன்) சாந்தமும் ஒன்றாய்ச் சேர்ந்தவுடன் தோன்றிய மகாதேஜசே ஐயப்பன் உருவம் கொண்டது. ஹரிஹரபுத்ரன், தர்மசாஸ்தா, ஐயனார் என்ற பெயர்கள் ஐயப்பனையே சாரும். சாஸ்தா என்பது சாத்தன் ஆகும். லக்ஷ்ஷோபலக்ஷம் பக்தர்கள் சபரி மலையில் கூடுகின்றனர். சாமியே சரணம் என்ற கோஷம் வான் நிறைந்திருக்கின்றது. பக்தர்கள் அனைவரும் சமத்துவம் நிறைந்த பக்தி. நாற்பது நாள் விரதானுஷ்டம் இந்தியாவில் பல இடங்களில் விரதம் அனுஷ்டிக்கிறார்கள். இலங்கையிலும் அப்படியே பல பக்தர்கள் கொள்ளுப்பிட்டி அருள்மிகு கருமாரி அம்பாள் கோவிலில் வழிபாட்டை தொடங்குகின்றார்கள். பதினெட்டு படிகளுடன் கோவில் கொண்டு அருள் புரிகின்றார். சபரிமலையே நினைவில் வருகிறது. வழிபாடுகள், பஜனைகள் சிறப்பாக இடம் பெறுகிறது. பக்தகோடிகள் கண்டு சிறப்பாக இடம் பெறுகிறது. பக்தகோடிகள் கண்டு பயனடைகின்றனர். விரத பூர்த்தி வழிபடுகிறார்கள். வரலாறுகள் பலவும், நாமாவளிகள் இன்னோரன்ன பலவும் மலரில் வருகின்றது. மலர் சிறப்புடையதாக அனைவருக்கும் பயனுடையதாக வெளிவர நல்லாசிகள்.

சுபம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆலய பிரதம குருவின்

# ஆசியுரை

வையம் புகழ் ஆரியங்காவினில் வாழ்ந்து
ஒய்யாரச் சபரிமலையில் சானித்தியம் கொண்டு
கையெடுக்கும் மானிடர்களுக்கெல்லாம் கருணை புரியும்
ஐயப்ப சுவாமியே நின் பாத கமலம் சரணமே!

எந்த வேளையும் நின் இரு மலர் பாதம் தொழ
மந்த மன நலிவகன்றே உளத் தூய்மை பெற
சிந்தை மகிழ் சிறப்பு பஜனாமிர்தமதை பணிவுடனே
உந்தன் மலர்பாத கமலத்தில் சமர்பிக்கின்றோம்

சின்னஞ்சிறியோர் நாம் செய்த பிழை பொறுத்து
அன்னையாய் எமை அரவணைத்து அருள் தந்து
உன் நாம புகழ்தரு பஜனாமிர்த மலருக்குழைத்தோருக்கு
மன்னவனே மாண்புடை சபரிகிரியோனே கிருபை புரிந்தருள்க!

" ஓம் சாமியே சரணம் ஐயப்பா "

*துன்னையூர்*
*"செஞ் சொற் கவிதா சிரோமணி"*
**சிவஸ்ரீ. ராம். தேவலோகேஸ்வர குருக்கள்**
*(ஆலய பிரதம குரு)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய நிர்வாகஸ்தரும்
ஐயப்ப பக்தருமான
**திரு. எஸ். செல்வகுமார் J.P.**
அவர்களின்

# அணிந்துரை

"சாமியே சரணம் ஐயப்பா"

மனிதனை தெய்வமாக்கும் மகத்துவம் நிறைந்த ஸ்ரீ ஐயப்ப சுவாமியின், "கார்த்திகை மாத விரத மண்டலம்" அற்புத மனத் தூய்மை தருவதாகும். மாலை கழுத்தில் அணிந்தவுடனேயே, அந்த ஐயனின் திரு உருவும் அவன் நாமங்களுமே எம் மனங்களில் பரிமளிக்கின்றன. இது அந்த ஹரிஹரனின் கருணா கடாஷத்தின் பிரதிபலிப்பேயாகும். இந்த விரத நாட்களில் எம்மை மறந்து, ஐயன் நாமங்களை மன மகிழ்ந்து பாடும் போது எம் துன்பங்கள் எல்லாம் பறந்தோடுகின்றது. அந்த ஆனந்த மிகு பஜனைக்கு பயன்படும் வகையில் இந்த " பஜனாமிர்தம் " தொகுக்கப்பட்டுள்ளது. இந்த மலரை தொகுத்த ஆலய சிவாசாரியாருக்கும் மலருக்கு நிதி உதவி வழங்கிய அனைவருக்கும் நன்றி கூறுவது என் முதற்பணி. அதிலும் மலரின் பெருஞ் செலவை பங்கேற்ற திரு. ராமநாதன், திரு. ராஜு, குடும்பத்தினர்க்கு ஐயன் திருவருள் கிடைக்க பிரார்த்தித்து, " பஜனாமிர்தம் " பஜனைக்கு ஏற்ற அமிர்தமாக அமைந்துள்ளது என கூறி எனது அணிந்துரையை அன்புடன் சமர்ப்பிக்கின்றேன்.

*நன்றி*

ஆலய நிர்வாகி

S. செல்வகுமார் **J.P**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

SWAMIYA SARANAM IYYAPPA

# ALL CEYLON IYYAPPA DEVA STHANAM

**SABARIMALAI THEETHA YATHIRAI KUZU**

478, Aluthmawatha Road, Colombo-15. Sri lanka. Tel: 071-32578

**AKILA BARATHA IYYAPPA SEVA SANGAM (IYYAPPAN ILLAM)**

**69, Vanroyan Street, Colombo-13. Sri Lanka. Tel: 341080**



கொள்ளுப்பிட்டி அஸ்ரல் கட்டிடத்தில் எழுந்தருளியிருக்கும் "தர்ம சாஸ்தா", "ஸ்ரீ மணிகண்டன்" எனப் போற்றப்படும் கலியுகவரதனாகிய ஐயன் ஐயப்பனின் ஆலயத்தில் "மகரஜோதி தினத்தன்று வெளியிடப்படவிருக்கும் "பஜனாமிர்தம்" என்ற நூலிற்கு எமது சபரிமலை ஐயப்ப யாத்திரைக் குழுவின் சார்பாக ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

இக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்த போதும், அதன் பின் வருடாவருடம் நடைபெறும் இலட்சார்ச்சனைப் பெருவிழா, இரதோற்சவம் அனைத்துமே கார்த்திகை மாத ஐயனின் விரத காலத்திலேயே இடம் பெறுவது மேலும் ஒரு சிறப்பாகும். ஆலய தர்மகர்த்தா திரு. எஸ். செல்வகுமார் சுவாமி அவர்களும் எமது யாத்திரைக் குழுவுடன் இணைந்தே தமது சபரிமலை யாத்திரையைத் தொடர்ந்தும் தொடர்ந்துகொண்டு வருவதும் – தற்போது பல ஐயப்ப பக்த்தர்கள் இங்கு மாலை அணிந்து விரதம் அனுட்டித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

திரு. செல்வக்குமார் சுவாமி அவர்கள் பதினெட்டுப்படிகளுடன் கூடிய ஒரு ஆலயத்தை அமைத்தது மட்டுமல்ல– வருடாவருடம் "சக்தி" என்று சொல்லக்கூடிய தானங்களில் சிறந்த அன்னதானத்தையும் ஐயனடியார்களுக்காக பம்பையில் வழங்கி வருவதையும் குறிப்பிடேயாக வேண்டும்.

திரு. செல்வக்குமார் சுவாமியவர்களுக்கும், ஏனைய கொள்ளுப்பிட்டி ஐயப்ப சுவாமிமார்களுக்கும், அடியார்களுக்கும் எல்லாம் வல்ல ஐயன் தனது கருணையையும் அருளையும் வழங்க வேண்டும் எனப் பிரார்த்தனை செய்து நிறைவு செய்கிறேன்.

*"ஓம் எங்கள் குல தெய்வமே – சரணம் ஐயப்பா"*

குருசாமி

சு. ரவீந்திரகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

### சபரிமலை தீர்த்தயாத்திரை குழு

**(ஆன்மீக, சமூக சேவை நிலையம்)**

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் பொருளாளரும், சபரிமலை தீர்த்தயாத்திரைக் குழுவின் குருசுவாமியுமான பொ. ரவீந்திரகுமரன் அவர்களின்

# ஆசிச்செய்தி

இயற்கை எழில் கொஞ்சும் ஸ்ரீலங்கா தனக்கே உரித்தானகம்பீரத்துடன் கொண்டு நிற்கும் ஈழத்தின் தென் திசையில் வர்த்தகப் பெருமக்களும், செல்வந்தர்களும், மெய்யடியார்களும் நிறைந்து வாழும் இலங்கையின் தலைநகரான கொழும்பு நகரிலே கொள்ளுப்பிட்டி பதியினிலே ஆர்.ஏ.டி மெல்மாவத்தை என்னும் பெரு வீதியினிலே "அஸ்ரல்" கட்டிட தொகுதியாக விளங்கும் தொடர்மாடி கட்டிடத்தின் 9வது மாடியினிலே "ஸ்ரீதேவி கருமாரி அம்மன்" "ஸ்ரீ ஐயப்ப சுவாமி" திருக்கோயில் இன்று எழிலாக விளங்குகின்றது.

இத்திருக்கோவிலிலே வருடா வருடம் கார்த்திகை 1ம் திகதியிலிருந்து ஐயப்ப சுவாமிமார்கள் விரதமிருந்து பூஜை கிரியைகளை நெறி தவறாது செய்து எண்ணற்ற மெய்யடியார்களுக்கு, அந்த சபரிகீசனின் திருவருள் கிட்டுவதற்கு வழிஅமைத்த அகிலாண்ட கோடி நாயகனான ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் திருநாமம் இத்திருநாடெங்கும் பரவ பாடுபடும் சுவாமிமார்களுக்கும் "ஸ்ரீதேவி கருமாரி அம்பாள்" ஸ்ரீஐயப்பசுவாமி திருக்கோயில் நிர்வாகி திரு. செல்வகுமார் சுவாமி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கிறேன்.

இந்த ஆலயத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் ஸ்ரீ ஐயப்ப படிப்பூஜையும், சரண கோசமும் நடைபெறுகின்றது. ஐயப்ப சுவாமியுடைய ஒவ்வொரு விஷேட தினங்களும் இங்கு கொண்டாடப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். இத்தகைய ஒரு திருக்கோவில் கிடைத்தது எல்லோருக்கும் கிடைத்த ஓர் வரப்பிரசாதமாகும்.

*சுவாமியே சரணம் ஐயப்பா*

**பொ. ரவீந்திரகுமரன்**

*அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் பொருளாளரும்*
*சபரிமலை தீர்த்தயாத்தரைக் குழுவின் குருசுவாமியும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓம் எங்கள் குல தெய்வமே சரணம் ஐயப்பா

1985 ஆம் ஆண்டில் அமரத்துவமடைந்த சிவஸ்ரீ பா. வைத்தியநாதக் குருக்கள் அவர்களுக்கு சிஷ்ருஷ்யை செய்து கொண்டிருந்தவேளையில் அனலைதீவு ஐயனார் தேர்த்திருவிழாவில் தேரில் ஏறும் வாய்ப்பை அளித்த பூரணை புஷ்கலை சமேத ஸ்ரீ அரிஹரபுத்திரனார 1995ம் ஆண்டு கொள்ளுப்பிட்டி ஸ்ரீ ஐயப்பசுவாமி கோவிலில் வருடாவருடம் கன்னிச் சுவாமிகளை அழைத்துச் செல்லும் எமது செல்வக்குமார் சுவாமியுடைய புண்ணியத்தினால் முதன் முதல் குருசாமி சு. ரவீந்திர குமார் சுவாமியினால் மாலை அணியப்பண்ணி தன்னிடத்தில் அழைப்பித்தார்.

கொள்ளுப்பிட்டி ஸ்ரீதேவி கருமாரியம்மன் ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஐயன் ஸ்ரீ தர்மசாஸ்தாவிற்கு கார்த்திகை மாதம் முதலாம் நாளிலிருந்து மகர சங்கிராந்தியன்று ஐயன் ஜோதியுருவில் காட்சிதரும் மகரஜோதிப் பெருவிழா வரை தொடர்ந்து தினமும் காலையில் அபிடேகமும், மாலையில் விசேட 18 படிப்பூசையும் பஜனையும் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இது தவிர ஏனைய காலங்களில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 7.00 மணிக்கு விசேட 18 படிப்பூசையும் பஜனைகளும் தொடர்ந்து கொண்டே நடை பெற்று வருகிறது.

இவ்வாலயம் கட்டப்பட்டு 5 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில் எமது ஆலயத்தில் நடைபெறும் ஐயப்பபஜனைக்கு உபயோகிக்கத்தக்க முறையில் "பஜனாமிர்தம்" என்ற இந்நூலை வெளியிடத்திருவருள் பாலித்திருப்பதும், எமது ஆலயபிரதமகுரு சிவஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள் இம்முறை ஐயனிடம் தனது கன்னிப் பயணத்தை மேற்கொண்டதும் ஐயனின் அற்புதத் திருவருளே.

எமது யாத்திரை பாவநாசம் சொரிமுத்தையனார் கோவிலில் இருமுடி கட்டலுடன் ஆரம்பித்து சரண கோஷத்தில் குறிப்பிட்டபடி ஆரியங்காவு குளத்துப்புழை - பந்தளம் - எருமேலி - பேரூர்தோடு - காளைகட்டி - அழுதை - கல்லிடும் குன்று. இஞ்சிப்பாறைக் கோட்டை - கரிவலந்தோடு - கரிமலை - பெரியானைவட்டம் - சிறியானைவட்டம் - பம்பை - நீலிமலை - அப்பாச்சிமேடு - இப்பாச்சிக்குழி - சபரிபீடம் - சரங்குத்தி ஆல் - சந்நிதானம் - சுவாமி தரிசனம் முடிந்தபின் நாம் மீண்டும் பம்பை வந்து மதுரையில் நிறைவு பெறும். விதிகளும், முறைகளும், தத்துவங்களும் நூலுக்கு நூல் மாறுபடும். மனம் - மொழி - மெய்யினால் ஐயனை துதித்து இந்த யாத்திரையை அவனுக்கே அர்ப்பணமாக்கி அடியேன் மேற்கொண்டு வருகிறேன். "ஏழை பங்காளனாய்" - "எளியோர்க்கு அருளும் தெய்வம்" என்றும் எமக்கு வழிகாட்டி நல்லருள் புரிவான் என்ற உறுதியுடன் இதனை நிறைவு செய்கின்றேன.

*"ஓம் ஊழ்வினை அழிப்பவனே - சரணம் ஐயப்பா"*

என்றும் அவன் பணியிலுள்ள,
தொண்டன்,
**தங்க முகுந்தன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணபதி பாடல்கள்



குருப்பிரம்மா குருவிஷ்ணு குருதேவோ மகேஸ்வரஹா
குருசாக்ஷாத் பரப்பிரம்ம தஸ்மை ஸ்ரீ குருவே நமஹ

மூஷிகவாகன மோதக ஹஸ்த சாமரகர்ண விளம்பித ஸூத்ர
வாமனரூப மகேஸ்வர புத்ர விக்ன விநாயக பாத நமஸ்தே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய் ஜெய் ஜெய் ஜெய் கணபதி தேவா
மாதா பார்வதி பிதா மஹா தேவா
கஜானனா கஜானனா
கஜானனா ஜெய் கணபதி தேவா

உலகமே அம்மை அப்பன் என்றே உரைத்தவனே
ஓம் எனும் பிரணவ ரூபா நாதா கணபதியே
வருவாய் கணபதியே வரம் தருவாய் குணநிதியே
அருள்வாய் கணபதியே அருள் புரிவாய் குணநிதியே

கலியுகவரதனே கற்பகவிநாயகனே
கண்கண்ட தெய்வம் நீயே கன்னிமூல கணபதியே
உன்பதம் சரணடைந்தேன் உமையவள் பாலகனே
மூல முதற் பொருளே மூஷிக வாகனனே.

* * *

கணநாதம் கணநாதம் ஈஸ்வரபுத்ரம் கணநாதம்
பார்வதி புத்ரம் கணநாதம் முத்திப்பிரதாயக கணநாதம்
விக்ன விநாயக கணநாதம் ஸித்தி விநாயக கணநாதம்
மூஷிக வாகன கணநாதம் மோதக ஹஸ்தா கணநாதம்
சிவசிவ கஜமுக கணநாதம் சிவகண வந்தித குணநீதா
வாவா வாவா அங்குச பாசா வந்தருளின்பந் தந்திடுநேசா
உமைதருபாலா குருமணியே உந்தனடைக்கலம்அடியோமே
மகா கணபதே குருசரணம் மனமகிழ்ந்து வந்தருள்சரணம்
சரணம் சரணம் தந்திமுகா சரவணபவனுக்குயர் துணைவா.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் எம்மைக் காக்கும் பிள்ளையார்
ஆற்றங்கரை மீதிலே அரசமரத்து நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
யானை முகம் கொண்டவர் ஐந்து கரங்கள் உடையவர்
பானை வயிறு படைத்தவர் பக்தர் குறை தீர்ப்பவர்
அவல் கடலை சுண்டலும் அரிசி கொழுக்கட்டையும்
கவலையின்றித் தின்னுவார் கண்ணை மூடித் தூங்குவார்
(கருணை புரிந்து அருளுவார்)

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கிவைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மையே காக்க வேண்டி நேரினும்
எலியின் மீது ஏறியே இஷ்டம் போலச் சுற்றுவார்
பாடிப்புகழும் பக்தரின் பாவம் தீர்க்கும் பிள்ளையார்
கூடிப் பாடும் தொண்டரின் குறைகள் தீர்க்கும் பிள்ளையார்

* * *

கௌரீ நந்தன கஜானனா
கிரிஜா நந்தன நிரஞ்சனா
பார்வதி நந்தன சுபானனா
பாஹி ப்ரபோமாம் பாஹிப் பிரசன்னா

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபிரான் பாடல்கள்



பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்துநீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச்சொரிந்து புறம் புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன் எங்கெழுந்தருளுவதினியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| வைக்கத்தப்பா | வைக்கத்தப்பா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| கருணாசாகர | தீனதயாளா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| கௌரீநாதா | கங்காதரனே | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| நீலகண்டனே | நிர்மலரூபா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| நந்திவாகனா | நாகபூஷணா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| கைலாசநாதா | பூமிப்பிரபஞ்சா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| பூலோகநாதா | பார்வதிபுருஷா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| சந்தரகலாதர | ஜடாதரனே | வைக்கத்தப்பா | பாஹிமாம் |
| லோக நாயக | தீனதயாளா | வைக்கத்தப்பா | பாஹிமாம் |

***

ஓம்சிவாய நமசிவாய ஓம்சிவாய சங்கரா
சசிகரனே சுந்தரனே ஓம்சிவாய சங்கரா
ஆடும்பாம்பை அணிந்தவனே ஓம்சிவாய சங்கரா
கங்கையைத் தரித்தவனே ஓம்சிவாய சங்கரா

***

கங்க ஜடாதர கௌரீ சங்கர கிரிஜா மனரமணா – ஜெய
ம்ருத்யுஞ்ஜய மகாதேவ மகேஸ்வர மங்கள சுபசரணா – ஹே
நந்தி வாகனா நாகபூஷணா நிருபம குணசதனா – ஹே
நடன மனோகர நீலகண்ட ஹர நீரஜதளநயனா.

***

சிவாய பரமேஸ்வராய சசிசேகராய நம ஓம்
பவாய குணசம்பவாய சிவதாண்டவாய நம ஓம்
ஸர்வாய ஸர்வேஸ்வராய விஸ்வேஸ்வராய நம ஓம்
லோகாய லோகேஸ்வராய ரிஷபத்பஜாய நம ஓம்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பலத்தரசே அருமருந்தே
ஆனந்தத்தேனே அருள்விருந்தே
பொது நடத்தரசே புண்ணியனே
புலவரெல்லாம் புகழ் கண்ணியனே
சிவசிவ சிவசிவ சின்மய தேஜா
சிவசுந்தர குஞ்சித நடராஜா
மலைதருமகளே மடமயிலே
மதிமுகவமுதே இளங்குயிலே
ஆனந்தக் கொடியே இளம்பிடியே
அற்புதத் தேனே மலைமானே
படன விவேகா பரம்பரவேதா
நடன சபேசா சிதம்பர நாதா
அரிபிரமாதியர் தேடிய நாதா
அரகர சிவசிவ ஆடியபாதா
தந்திர மந்திர யந்திர பாதா
சங்கர சங்கர சங்கர நாதா
கருணாநிதியே சபாபதியே
கதிமாநிதியே பசுபதியே
கனக சிதம்பர கங்கர ஹரஹர
அனக பரம்பர சங்கர ஹரஹர
சங்கர சிவசிவ மகாதேவா
எங்களை ஆட்கொள்ள வாவாவா
அரஹர சிவசிவ மகாதேவா
அருளமுதந்தர வாவாவா.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மன் பாடல்கள்



ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப்புவி அடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந்த தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம்

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓமசிவம்

நாத்கீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர தந்த்ர வஸ்யசக்தி ஓம்சிவம்

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம்

துஷ்டசத்ரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம்

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்

***

யாதுமாகி நின்றாய் — தாயே
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் — நின்றன்
செயல் களின்றியில்லை
போதுமிங்கு மாந்தர் — வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என் மீ
தருள் புரிந்து காப்பாய் (யாதுமாகி)

எந்த நாளும் நின்மேல் — தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் — தாயே
கருணை வெள்ளமானாய்
மந்த மாருதத்தில் — வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் — அங்குன்
செம்மை தோன்றுமன்றோ (யாதுமாகி)

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்த்ர மௌலீஸ்வரீ சங்கரீ
மங்களப்ரதாயினி மதனகோடி சுந்தரி
மாதவஹரி சோதரி தேவி ஜெகன் மோகினி

***

உமையவளே அருள்புரிவாயம்மா
ஓம்காரரூபிணி அகிலாண்ட நாயகி
அடியார்கள் வினைதீர்க்கும் ஆதிபராசக்தி
நான் செய்த பிழைகளெல்லாம் பொறுப்பாயம்மா
ஜகதம்பிகே சிவரஞ்சனி.

***

வருகிறாள் வருகிறாள் அன்னை சக்தி வருகிறாள்
வருகிறாள் வருகிறாள் ஆதி சக்தி வருகிறாள்

பாவம் எல்லாம் தீர்ப்பதற்கு பராசக்தி வருகிறாள்
பக்தர்களைக் காப்பதற்கு பத்ரகாளி வருகிறாள்

இன்னல் எல்லாம் தீர்ப்பதற்கு இச்சாசக்தி வருகிறாள்
கீர்த்தியோடு புகழ் வழங்கிட கிரியாசக்தி வருகிறாள்

ஞானமழையைப் பொழிவதற்கு ஞானசக்தி வருகிறாள்
நம்பும் நம்மைக் காப்பதற்கு தேவி ஓடி வருகிறாள்

சமயபுரத்தில் வாழும் அம்மை சாந்தி வழங்க வருகிறாள்
சஞ்சலங்கள் தீர்ப்பதற்கு சாம்பவியும் வருகிறாள்

சோட்டாணிக்கரை பகவதியும் சோகம் தீர்க்க வருகிறாள்
சொர்க்க போக வாழ்வை வழங்க தேவி ஆடி வருகிறாள்

மாயைவிலகி மனம் திருந்த மஹாதேவி வருகிறாள்
மாதுளம்பூ மேனிகொண்ட மஹாகாளி வருகிறாள்

மோகம் எல்லாம் மறைவதற்கு மூகாம்பிகை வருகிறாள்
முக்திநலம் தந்திடவே சக்தி ஓடி வருகிறாள்

பஞ்சம் ஓட பாவம் ஓட பஞ்சபாணி வருகிறாள்
பாம்பணிந்த பரமனோடு பார்வதியாள் வருகிறாள்

மகிடன் தலையின் மீதிலேறி துர்க்கையாக வருகிறாள்
மலைமகளாய் கலைமகளாய் அலைமகளாய் வருகிறாள்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பாடல்கள்



அருவமும் உருவமாகி அனாதியாய்ப்பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதி பிளம்பதோர் மேனியாகி
கருணை கூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருகா ஜெய ஓம் முருகா
சரவணா சண்முகா சிவசக்தி பாலா
ஓம் சரவணபவ தேவா ஸ்கந்தா
சூரசம்ஹாரா மாயோன் மருகா

❊ ❊ ❊

சரவணா சிவகுமாரா, சண்முகநாதா ஜெய் ஜெய் சண்முக நாதா
சுப்ரம்மண்யா கார்த்திகேயா கதிர்வேலா
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா
சரணம் சரணம் சண்முகநாதா – ஓம்
சரணம் சரணம் சண்முகநாதா.

❊ ❊ ❊

| | | | |
|---|---|---|---|
| சுப்ரம்மண்யம் | சுப்ரம்மண்யம் | சண்முகநாதா | சுப்ரம்மண்யம் |
| சுப்ரம்மண்யம் | சுப்ரம்மண்யம் | சுவாமிநாதா | சுப்ரம்மண்யம் |
| சிவ சிவ சிவ சிவ | சுப்ரம்மண்யம் | ஹர ஹர ஹர ஹர | சுப்ரம்மண்யம் |
| சிவ சிவ ஹர ஹர | சுப்ரம்மண்யம் | ஹர ஹர சிவ சிவ | சுப்ரம்மண்யம் |
| சிவ சரவணபவ | சுப்ரம்மண்யம் | குரு சரவணபவ | சுப்ரம்மண்யம் |
| சிவ சிவ ஹர ஹர | சுப்ரம்மண்யம் | ஹர ஹர சிவ சிவ | சுப்ரம்மண்யம் |
| குமார குருபர | சுப்ரம்மண்யம் | கூர்வடிவேலா | சுப்ரம்மண்யம் |
| சிவ சிவ ஹர ஹர | சுப்ரம்மண்யம் | ஹர ஹர சிவ சிவ | சுப்ரம்மண்யம் |
| சிவகுருபரசிவ | சுப்ரம்மண்யம் | குருபரஹரசிவ | சுப்ரம்மண்யம் |
| சிவ சிவ ஹர ஹர | சுப்ரம்மண்யம் | ஹர ஹர சிவ சிவ | சுப்ரம்மண்யம் |
| ஓம் ஓம் ஓம் ஓம் | சுப்ரம்மண்யம் | ஓங்காரரூபா | சுப்ரம்மண்யம் |
| ஓங்காரரூபா | சுப்ரம்மண்யம் | ஓம் சரவணபவ | சுப்ரம்மண்யம் |

❊ ❊ ❊

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே வா வா முருகா
ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே வா வா முருகா
ஆறுமுக வேலவனே வா வா வா
ஒய்யாரி வள்ளி லோலா வா வா முருகா
ஓங்கார தத்துவமே நீ வா வா முருகா
ஒளவைக் குபதே சித்தவா வா வா முருகா
அகில லோக நாயகனே வா வா முருகா
ஓடி வா நீ ஓடிவா நீ வா வா முருகா
ஆடி வா நீ ஆடிவா நீ வா வா முருகா

***

சிவகுமாரனே சக்திபாலனே வா வா வா

சரவணபவ குக சண்முகவேலா வா வா வா

ஓங்காரத்தத்துவமே நீ வா வா வா

கார்த்திகேயனே சுவாமி நாதா வா வா வா

கந்தா வா வா வா


வேலா வா வா வா

முருகா வா வா வா

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஷ்ணு பாடல்கள்



குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயினஎல்லாம்
நிலம்தரஞ் செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயினசெய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா எனும் நாமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்த ஸாகரா முரளீதரா
மீரா ப்ரபு ராதே ஸ்யாம வேணு கோபாலா
நந்தயசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுலபாலா ஜெய் ராஜகோபாலா.
ராதே ராதே ராதே ராதே ராதே கோவிந்தா
ப்ருந்தாவன சந்தா அநாதநாத தீனபந்தோ ராதே கோவிந்தா

***

பண்டரிநாதா பாண்டுரங்கா ராதே கோவிந்தா — ப்ருந்தா
நந்தகுமார நவநீத சோரா ராதே கோவிந்தா — ப்ருந்தா
புண்டரிகாக்ஷா புராணபுருஷா ராதே கோவிந்தா — ப்ருந்தா
விட்டலவிட்டல ஜெயஹரி விட்டல ராதே கோவிந்தா — ப்ருந்தா
நந்த முகுந்தா பரமானந்தா ராதே கோவிந்தா — ப்ருந்தா
ராமா கிருஸ்ணா கிருஸ்ணா ராமா ராதே கோவிந்தா — ப்ருந்தா
பக்தவத்ஸலா பாகவதப்ரியா ராதே கோவிந்தா — ப்ருந்தா
வேணு விலோலா விஜய கோபாலா ராதே கோவிந்தா — ப்ருந்தா
யசோத பாலா புண்ய ஸ்லோகா ராதே கோவிந்தா — ப்ருந்தா
கோசம்ரக்ஷகா கோபீநாதா ராதே கோவிந்தா — ப்ருந்தா

***

ராதே கோவிந்தா ஜெய் ஜெய் ராதே கோபாலா
தீன நாதா கோவிந்தா அநாத நாதா கோபாலா
ராதா லோலா கோவிந்தா ராஸவிலோலா கோபாலா
கோவிந்தா ஜெய கோவிந்தா கோபால ஜெய யோபாலா.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமன் பிறந்தது நவமியிலே
நட்ட நடுப்பகல் வேளையிலே
கண்ணன் பிறந்தது அஷ்டமியில்
காரிருள் நடுநிசி வேளையிலே — இராமன்

இராமன் பிறந்தது அரண்மனையில்
நன்றாய் பார்த்தனர் மக்களெல்லாம்
கண்ணன் பிறந்தது கடுஞ்சிறையில்
கண்டவர் தாயும் தந்தையுமே
சூரிய குலத்தில் இராமனுமே
தோன்றினன் பெருமை தோன்றிடவே
சந்திர குலத்தில் கண்ணனுமே
வந்தனன் பெருமை தந்திடவே — இராமன்

மனிதர் போலே இவ்வுலகில்
வாழ்ந்து காட்டினன் இராமனுமே
மாயா ஜாலம் பல புரிந்து
வாழ்ந்தனன் நீலக் கண்ணனுமே — இராமன்

இராமன் பெற்ற குணங்களெல்லாம்
நாமும் பெற்று சிறந்திடுவோம்
கண்ணன் கீதையில் கூறியதைக்
கருத்தினில் கொண்டு உயர்ந்திடுவோம் இராமன்

வாழ்ந்து காட்டிய இராமனையும்
வழியைக் காட்டிய கண்ணனையும்
வாழ்வில் என்றும் மறவோமே
மறவோம் மறவோம் மறவோமே. — இராமன்


***

ரகுபதி ராகவ ராஜா ராம் பதீத பாவன சீதாராம்
ராமராம ஜெய ராஜா ராம் ராமராம ஜெய சீதா ராம்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் பாடல்கள்



அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத்தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியற்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக்கண்(டு) அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் எம்மை அளித்துக்காப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சனை மைந்தனாம் ஆஞ்சநேயன்
ஐந்திலே ஒன்று அடைந்தவனாம்
அவன் பேர் சொல்லி மங்களமாய்
அனைவரும் வாழ்வோம் அவனியிலே.

அருணன் குமரன் சுக்ரீவன்
அமைச்சனாய் அமைந்த அனுமனவன்
இராம சுக்ரீவ நட்பதனை
செய்து வைத்து மகிழ்ந்தவனாம்.

எழுபது வெள்ள வானரரில்
எண்ணி எடுத்த வீரனவன்
ஏற்றிய மலையை எடுத்தெறிந்து
ஏழரை யானை விட்டனவன்.

சீதையைத் தேடச் சென்றவனாம்
சீதாப் பிராட்டியைக் கண்டவனாம்
சீரிய இலங்கையை அழித்தவனாம்
சீதா இராமனைப் பணிந்தவனாம்.

சூடாமணியைச் சூடச் செய்து
சூசகமாக சொல்லி விட்டு
கண்டேன சீதையை என்று கூறி
கணையாழி தந்து மகிழ்ந்தவனாம்.

மயில் இராவணனை வென்றவனாம்
மாபல பீமனை மடக்கினனாம்
மாருதி நாம வானர னாம்
மானிடர்க் கருள்வாய்! வாயுமைந்தா.

என்றும் வாழ்ந்து வருபவனாம்
எங்கும் நிறைந்து இருப்பவனாம்
முடிபுனை இராமன் உருவம் தனை
உள்ளத்தில் என்றும் வைத்தவனாம்.

இராமன் அவன்பேர் உள்ளளவும்
இராம தூதன்பேர் வாழியவே
இராம ராம் ஜெய் இராஜா ராம்
இராமா ராம்ஜெய் சீதாராம்.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரி ஹரி ஹரி ராம் ராம் ஆஞ்சநேய ராம ராம்
ஜெய ஜெய ஜெய ராம ராம் ராமநாதன் தூதனாம்

அஞ்சனாவின் செல்வனாம் ஆழி கடந்த வீரனாம்
ஆயுள் தந்து எம்மையே காக்கும் ஆஞ்ச நேயனாம்

வடையின் மாலை பிரியனாம் தடைகள் நீக்கும் இறைவனாம்
தஞ்சமென்று வந்தவர் நெஞ்சம் வாழும் தெய்வமாம்

ராமனுக்கு தொண்டனாம் பீமனுக்கு அண்ணனாம்
பாண்டவர்க்கு தோழனாம் போர் ஜெயித்த வீரனாம்

தாயென அவன் சீதையின் தாழ் வணங்கும் பக்தனாம்
சேயென அவன் எம்மையே காத்திட வரும் வல்லனாம்

வான்கதிரினை தீண்டவே வானில் பறந்த பாலனாம்
தேன் கனிகளை உண்ணவே ஆசை கொண்ட தெய்வமாம்

வாலில் வைத்த தீயினால் வஞ்சம் தீர்த்து போனவன்
வண்ண லங்கை தீவையே நாசம் செய்து நின்றவன்

ராம நாமம் ஒன்றையே வேதமாகக் கொண்டவன்
காவல் காக்கும் தெய்வமாய் வாழும் வாயு புத்திரன்

இருளில் ஜோதியானவன் இடரை நீக்கும் காவலன்
இதயம் தன்னில் ராமனை இருத்தி வாழும் சேவகன்

மலை சுமந்தவன் தோளிலே மணி இருக்குது வாலிலே
தினம் தொழுதிடும் போதிலே சுகம் மலர்ந்திடும் வாழ்விலே

திருவடிதனை போற்றுவோம் திருவருளினை காணுவோம்
மறுபிறவியும் ராமனின் தூதுவன் புகழ் பாடுவோம்

***

ஆஞ்சநேய வீரா ஹனுமந்த சூரா
வாயு குமார வானரவீரா
அஞ்சனபுத்ரா அதிபலவந்தா
மாருதிராயா மகானுபாவா

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெத்தலையில மாலகட்டுங்க மாலகட்டுங்களே — ஒங்க
வேதனைய சொல்லி சொல்லி மாலகட்டுங்களே
தொளசி இல கொழுந்தெடுத்து கோத்து கட்டுங்களே — ராம
தோத்திரத்த சொல்லி சொல்லி மாலகட்டுங்களே

கோடி பணம் கேட்பதில்லை மாருதி ராஜா — அவன்
கொட்டும் பனி நேரத்திலும் பூத்திடும் ரோஜா
ராம ஜெயம் சொன்னீங்கன்னா வந்து நிற்பானே — தினம்
ராம நாத சாமி பேர பாடி நிற்பானே

ஆசையெல்லாம் வேரறுத்த அற்புத சாமி — அவன்
ஓசை தரும் மணி இருக்கும் வால் கொண்ட சாமி
காத்தடிச்சா புயலடிச்சா கலங்கிடலாமா — அந்த
கட்டித்தங்க மனசிருக்க தவிப்பது ஏம்மா

பொட்டுவச்சி பொட்டுவச்சி பூச செஞ்சாலே — அவன்
எட்டுவச்சி வாசல் கதவ தட்டிடுவானே
மெட்டெடுத்து ராமனுக்கு பாட்டெடுத்தாலே — அவன்
மெல்ல வந்து தாளமிட்டு கேட்டிருப்பானே

கும்மி கொட்டி கும்மி கொட்டி கும்மி போடு — எங்க
கோமகனாம் மாருதிக்கு சரணங்கள் பாடு
நம்பி வந்து நம்பி நின்று நல்லத கேளு — மனம்
வெம்பி வெடிக்க தேவயில்ல நன்மை கையோடு

* * *

வீரமாருதி கம்பீர மாருதி
தீரமாருதி அதிதீரமாருதி
கீதமாருதி சங்கீதமாருதி
தூதமாருதி ராமதூதமாருதி
பக்தமாருதி பரமபக்தமாருதி

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயப்ப பாடல்கள்



களிறொடு பிடியும் கூடிக்களித்திடும் பம்பையாற்றின்
வளநிறை மருங்கில் மன்னும் மாண்புடை சபரி கிரியோன்
வளர்பிறை சூடுஞ் சிவனும் விஷ்ணுவும் தந்த மகனாம்
ஒளி நிறை உருவின் ஐயன் உபயமென் பாதம் சரணே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
# சரணக் கோவை

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் மாதா பிதா குரு தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் காந்த மலை ஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் ஹரிஹர சுதனே சரணம் ஐயப்பா
ஓம் அன்னதான பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் ஆறுமுகன் சோதரனே சரணம் ஐயப்பா
ஓம் ஆபத்தில் காப்போனே சரணம் ஐயப்பா
ஓம் இன்தமிழ்ச்சுவையே சரணம் ஐயப்பா
ஓம் இச்சை தவிர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஈசனின் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் ஈடில்லாத் தெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் உண்மைப் பரம் பொருளே சரணம் ஐயப்பா
ஓம் உலகாளும் காவலனே சரணம் ஐயப்பா
ஓம் ஊமைக்கருள் புரிந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் ஊழ்வினை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குலதெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் எழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன் மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங் கோயில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் குளத்துப் புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
ஓம் வீரமணி கண்டனே சரணம் ஐயப்பா
ஓம் உத்திரத்தில் உதித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் உத்தமனே சத்தியனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பையிலே பிறந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் பந்தள மாமணியே சரணம் ஐயப்பா
ஓம் சகலகலை வல்லோனே சரணம் ஐயப்பா
ஓம் சாந்தம் நிறை மெய்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் குருமகனின் குறைதீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருதட்சணை அளித்தவனே சரணம் ஐயப்பா
ஓம் புலிப்பாலைக் கொணர்ந்தவனே சரணம் ஐயப்பா
ஓம் வன்புலியின் வாகனனே சரணம் ஐயப்பா
ஓம் தாயின் நோய் தீர்த்தவனே சரணம் ஐயப்பா
ஓம் குருவின் குருவே சரணம் ஐயப்பா
ஓம் வாபரின் தோழனே சரணம் ஐயப்பா
ஓம் துளசிமணி மார்பனே சரணம் ஐயப்பா
ஓம் தூயவுள்ளம் அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் இருமுடிப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் எருமேலி சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் நித்திய பிரம்மச்சாரியே சரணம் ஐயப்பா
ஓம் நீலவஸ்திர தாரியே சரணம் ஐயப்பா
ஓம் பேட்டை துள்ளும் பேரருளே சரணம் ஐயப்பா
ஓம் பெரும் ஆணவத்தை அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சாஸ்தாவின் நந்தவனமே சரணம் ஐயப்பா
ஓம் சாந்திதரும் பேரழகே சரணம் ஐயப்பா
ஓம் பேரூத்தோடு தரிசனமே சரணம் ஐயப்பா
ஓம் பேதமையை ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் காளை கட்டி நிலையமே சரணம் ஐயப்பா
ஓம் அதிர்வேட்டுப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் அழுதமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் ஆனந்தமிகு பஜனைப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் கல்லிடும் குன்றே சரணம் ஐயப்பா
ஓம் உடும்பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் இஞ்சிப் பாறைக் கோட்டையே சரணம் ஐயப்பா
ஓம் கரியிலந் தோடே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் கரிமலை இறக்கமே சரணம் ஐயப்பா
ஓம் பெரியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் சிறியானை வட்டமே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா நதி தீர்த்தமே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் பாவமெல்லாம் அழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் திருவேணி சங்கமமே சரணம் ஐயப்பா
ஓம் ஸ்ரீ இராமர் பாதமே சரணம் ஐயப்பா
ஓம் சக்தி பூஜை கொண்டவனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிக்கு அருள் செய்தவனே சரணம் ஐயப்பா
ஓம் தீப ஜோதித் திரு ஒளியே சரணம் ஐயப்பா
ஓம் தீராத நோய் தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் பம்பா விளக்கே சரணம் ஐயப்பா
ஓம் பழவினைகள் ஒழிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் தென்புலத்தார் வழிபாடே சரணம் ஐயப்பா
ஓம் திருபம்மையின் புண்ணியமே சரணம் ஐயப்பா
ஓம் நீலிமலை ஏற்றமே சரணம் ஐயப்பா
ஓம் நிறைவுள்ளம் தருபவனே சரணம் ஐயப்பா
ஓம் அப்பாச்சி மேடே சரணம் ஐயப்பா
ஓம் இப்பாச்சிக் குழியே சரணம் ஐயப்பா
ஓம் சபரிபீடமே சரணம் ஐயப்பா
ஓம் சரங்குத்தி ஆலே சரணம் ஐயப்பா
ஓம் உரல்குழி தீர்த்தமே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பண்ண சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் கடுத்த சுவாமியே சரணம் ஐயப்பா
ஓம் பதினெட்டாம் படியே சரணம் ஐயப்பா
ஓம் பகவானின் சந்நிதியே சரணம் ஐயப்பா
ஓம் பரவசப் பேருணர்வே சரணம் ஐயப்பா
ஓம் பசுவின் நெய் அபிஷேகமே சரணம் ஐயப்பா
ஓம் கற்பூரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் நாகராசப் பிரபுவே சரணம் ஐயப்பா
ஓம் மாளிகைப் புறத்தம்மனே சரணம் ஐயப்பா
ஓம் மஞ்சமாதா திருவருளே சரணம் ஐயப்பா
ஓம் அக்கினிக் குண்டமே சரணம் ஐயப்பா
ஓம் அலங்காரப் பிரியனே சரணம் ஐயப்பா
ஓம் பஸ்மக் குளமே சரணம் ஐயப்பா
ஓம் சற்குரு நாதனே சரணம் ஐயப்பா
ஓம் மகரஜோதியே சரணம் ஐயப்பா
ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா

ஓம் பூத நாதாய வித்மஹே
பவ நந்தனாய தீமஹி
தந்தோ சாஸ்தப்பிரசோதயாத்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிநடைப் பாடல்

| | | |
|---|---|---|
| சுவாமியே | – | ஐயப்போ |
| ஐயப்போ | – | சுவாமியே |
| சுவாமி சரணம் | – | ஐயப்ப சரணம் |
| பள்ளிக்கட்டு | – | சபரிமலைக்கு |
| இருமுடிக்கட்டு | – | சபரிமலைக்கு |
| கட்டும் கட்டும் | – | சபரிமலைக்கு |
| கன்னிக்கட்டு | – | சபரிமலைக்கு |
| பழமலைக்கட்டு | – | சபரிமலைக்கு |
| அள்ளிக்கட்டு | – | சபரிமலைக்கு |
| நம்முடையயாத்திரை | – | சபரிமலைக்கு |
| யாரைக்காண | – | சுவாமியைக் காண |
| சுவாமியைக் கண்டால் | – | பாவம் தீரும் |
| பாவம் தீர்ந்தால் | – | மோட்சம் கிட்டும் |
| எப்போ கிட்டும் | – | இப்போ கிட்டும் |
| யாரைக் கண்டால் | – | சுவாமியைக் கண்டால் |
| என்ன கிட்டும் | – | மோட்சம் கிட்டும் |
| பகவானே | – | பகவதியே |
| தேவனே | – | தேவியே |
| ஈஸ்வரனே | – | ஈஸ்வரியே |
| சுவாமி சரணம் | – | ஐயப்ப சரணம் |
| பகவான் சரணம் | – | பகவதி சரணம் |
| தேவன் சரணம் | – | தேவி சரணம் |
| ஈஸ்வரன் சரணம் | – | ஈஸ்வரி சரணம் |
| வில்லாளி வீரனே | – | வீரமணி கண்டனே |
| பூலோக நாதனே | – | பூமிப்பிரபஞ்சனே |
| ராஜாதி ராஜனே | – | ராஜகுமாரனே |
| சுவாமிமாரே | – | ஐயப்பமாரே |
| கல்லும் முள்ளும் | – | காலுக்கு மெத்தை |
| குண்டும் குழியும் | – | கண்ணுக்கு வெளிச்சம் |
| மேடு பள்ளம் | – | பரமானந்தம் |
| கடினம் கடினம் | – | ஏற்றம் கடினம் |
| ஏற்றம் கடினம் | – | கரிமலை ஏற்றம் |
| தேகபலம் தா | – | பாதபலம் தா |
| ஏற்றிவிடப்பா | – | தாக்கிவிடப்பா |
| தாங்கி விடப்பா | – | ஏந்தி விடப்பா |
| சுவாமி பாதம் | – | ஐயப்ப பாதம் |
| சுவாமியப்பா | – | ஐயப்பா |
| சரணமப்பா | – | ஐயப்பா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்களப்பா — ஐயப்பா
ஏழையப்பா — ஐயப்பா
காப்பாயப்பா — ஐயப்பா
அப்பா அப்பா — ஐயப்பா
பம்பா வாசா — ஐயப்பா
பந்தள ராஜா — ஐயப்பா
மோகினி சுதனே — ஐயப்பா
மோகன ரூபா — ஐயப்பா
குருவின் குருவே — ஐயப்பா
என் குரு நாதா — ஐயப்பா
எருமேலி வாசா — ஐயப்பா
ஏழை பங்காளா — ஐயப்பா
புலிமேல் அமர்ந்தவா — ஐயப்பா
புண்ணிய சொரூபனே — ஐயப்பா
கலியுக வாதா — ஐயப்பா
கனதவ விரதா — ஐயப்பா
வனத்திலிருப்பவா — ஐயப்பா
வன்புலி வாகனா — ஐயப்பா
வாபரின் தோழா — ஐயப்பா
வாமனின் மைந்தா — ஐயப்பா
நெய்யபிஷேகம் — சுவாமிக்கே
கற்பூர தீபம் — சுவாமிக்கே
பாலபிஷேகம் — சுவாமிக்கே
தேனபிஷேகம் — சுவாமிக்கே
பன்னீரபிஷேகம் — சுவாமிக்கே
புஷ்பலங்காரம் — சுவாமிக்கே
அவலும் மலரும் — சுவாமிக்கே
முத்திரைத் தேங்காய் — சுவாமிக்கே
காணிப் பொன்னும் — சுவாமிக்கே
வெள்ளரி நேத்யம் — சுவாமிக்கே
கதலிப்பழமும் — சுவாமிக்கே
கருடன் வருவதும் — சுவாமிக்கே
சுவாமி திந்தக்கத் தோம் தோம் ஐயப்ப திந்தக்கத் தோம் தோம்
ஐயப்ப திந்தக்கத் தோம் தோம் சுவாமி திந்தக்கத் தோம் தோம்
மாலைக்குள்ளே — ஐயப்பா
மனசுக்குள்ளே — ஐயப்பா
பூவுக்குள்ளே — ஐயப்பா
மணத்துக்குள்ளே — ஐயப்பா
சுவாமியே — ஐயப்பா
ஐயப்பா — சுவாமியே
ஓம் சுவாமியே — சரணம் ஐயப்பா

✻✻✻

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பன் கவசம்

## காப்பு

அரிஹர புத்ரனை ஆனந்த ரூபனை
இருமூர்த்தி மைந்தனை அறுமுகன் தம்பியை
சபரிகிரீசனை சாந்த சொரூபனை
தினம் தினம் போற்றி பணிந்திடு வோமே
ஐயப்ப தேவன் கவசமிதனை
அனுதினம் சொல்ல அல்லல்கள் ஒழியும்
தினம் தினம் துதிக்கத் தீரும் வினையெல்லாம்
நாடிய பொருளும் நலமும் வருமே

## நூல்

மண்ணுலகெல்லாம் காத்தருள் செய்ய
மணிகண்ட தேவா வருக வருக
மாயோன் மைந்தா வருக வருக
ஐங்கரன் சோதரா ஐயப்பா வருக 1

புலிவாகனனே வருக வருக
புவியெல்லாம் காத்திட வருக வருக
பூரணை நாதனே வருக வருக
புண்ணிய மூர்த்தியே வருக வருக 2

பூத நாயகா வருக வருக
புஷ்களைபதியே வருக வருக
பொன்னம்பலத்துறை ஈசா வருக
அடியாரைக் காக்க அன்புடன் வருக 3

வருக வருக வாசவன் மைந்தா
வருக வருக வீரமணிகண்டா
வஞ்சனை நீக்கிட வருக வருக
வல்வினை போக்கிட வருக வருக 4

ஐயம் தவிர்த்திட ஐயப்பா வருக
அச்சம் அகற்றிட அன்பனே வருக
இருவினை களைந்தே எனை யாட்கொள்ள
இருமூர்த்தி மைந்தா வருக வருக 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெண்படியை மனதில் நினைக்க
பண்ணிய பாவம் பொடிப் பொடியாகும்
ஐயப்பா சரணம் என்றே கூறிட
ஐம்பூதங்களும் அடி பணிந்திடுமே 6

சபரிகிரீசனை நினைத்தே நீறிட
துன்பங்கள் எல்லாம் தூள் தூளாகும்
சரணம் சரணம் என்றே சொல்லிட
சித்திகள் யாவும் வந்தடைந்திடுமே 7

பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பகைவர் களெல்லாம் பணிந்தே வணங்குவர்
ஐயப்பன் பாதம் அனுதினம் நினைக்க
அவனியிலுள்ளோர் அடிபணிந்தேத்துவர் 8

சரணம் சரணம் ஐயப்பா சரணம்
சரணம் சரணம் சபரி கிரீசா
சரணம் சரணம் சற்குரு நாதா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 9

## வேண்டுதல்

சிவனார் மகன் என் சிரசினைக் காக்க
நெடுமால் மைந்தன் நெற்றியைக் காக்க
கஜமுகன் தம்பி என் கண்ணினைக் காக்க
நாரணன் பாலன் நாசியைக் காக்க 10

இருமூர்த்தி மைந்தன் என் இருசெவி காக்க
வாபரின் தோழன் வாயினைக்காக்க
பம்பையின் பாலன பற்களைக் காக்க
நான்முக பூஜ்யன் நாவினை காக்க 11

கலியுக வரதன் என் கழுத்தினைக் காக்க
குமரன் தம்பி என் குரல்வளை காக்க
புஷ்களை நாதன் புஜங்களை காக்க
முக்கண்ணன் பாலன் முழங்கையை காக்க 12

வீரமணிகண்டன் விரல்களைக் காக்க
கயிலை மைந்தன் கைகளை காக்க
மணிகண்டதேவன் மார்பினைக் காக்க
வன்புலி வாகனன் வயிற்றினைக் காக்க 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுமுதற் கடவுள் என் முதுகினை காக்க
இருமுடிப்பிரியன் என் இடுப்பினைக் காக்க
பிரம்பாயுதன் என் பிட்டங்கள் காக்க
தர்ம சாஸ்தா துடைதனைக் காக்க 14

முருகன் சோதரன் முழங்கால் காக்க
கற்பூர ஜோதி என் கணைக்கால் காக்க
பந்தள பாலன் பாதத்தினை காக்க
விஜய குமாரன் விரல்களைக் காக்க 15

அன்னதானப் பிரபு அங்கமெல்லாம் காக்க
ஆரியங்கா ஜோதி அன்புடன் காக்க
காட்டாளரூபி காலையில் காக்க
நவக்ரஹநாதன் நடுப்பகல் காக்க 16

மாலின் மகனார் மாலையில் காக்க
அரிஹர சுதனார் அந்தியில் காக்க
இன்பமய ஜோதி இரவினில் காக்க
எரிமேலி சாஸ்தா என்றுமே காக்க 17

அரியின் மகனார் அனுதினம் காக்க
நடராஜன் பாலன் நாள்தோறும் காக்க
வாசவன் செல்வன் வலப்புறம் காக்க
இருமுடிஈசன் இடப்புறம் காக்க 18

காக்க காக்க கருணையால் காக்க
பார்க்க பார்க்க என்பாவம் பொடிபட
இம்மையும் மறுமையும் இல்லாதொழிந்திட
ஈசன் மகன் எனை என்றுமே காக்க 19

கொடிய விஷங்களும் கொள்ளை நோய்களும்
குருதியைக் குடிக்கும் துஷ்டப் பேய்களும்
காந்தமலைதனை கருத்தில் கொண்டிட
கலங்கி மறைந்திட கருணை புரிவாய் 20

பில்லி சூனியம் பலவித வஞ்சனை
பம்பையின் பாலன் பெயர் சொல்லிடவும்
பஞ்சாய் பறக்க வரமெனக் கருள்வாய்
பயங்களை போக்கி அபயம் அளிப்பாய் 21

வாதம் பித்தம் சிலேட்சுமத்துடனே
வாந்தியும் பேதியும் வலிப்பும் சுளுக்கும்
எவ்வித நோயும் எனையணு காமல்
என்றுமே காப்பாய் எரிமேலி தேவா 22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியும் செல்வமும் கள்ளமில்லா மனமும்
நல்லோர் உறவும் நாளும் அருள்வாய்
நல்ல மனதுடன் உனை நான் துதிக்க
நித்தமும் அருள்வாய் சபரி கிரீசா 23

காமம் குரோதம் லோபம் மோஹம்
மதமாச் சர்யமெனும் அறுபெரும் பேய்களும்
என்றுமே என்னை அணுகி விடாமல்
ஐயப்ப தேவா வரமெனக் கருள்வாய் 24

சூது, பொறாமை, பொய், கோபமில்லாமல்
சோரம், லோபம் துன்மார்க்கம் கல்லாமல்
வேத நெறிதனை விலகி நில்லாமல்
வீரமணிகண்டா வரமெனக் கருள்வாய் 25

மூப்பும் பிணியும் வறுமையும் பசியும்
வந்தெனை வாட்டி வதைசெய் யாமல்
உள்ளன் புடனே உன் திரு நாமம்
அனுதினம் சொல்ல அருள் தருவாயே 26

## நமஸ்ஹாரம்

அரிஹர புத்ரா அன்பா நமோ நமோ
சபரிகிரீசா சாஸ்தா நமோ நமோ
பதினெண் படிவாழ் பரமா நமோ நமோ
ஐங்கரன் சோதரா ஐயப்பா நமோ நமோ 27

பொன்னம் பலத்துறை புண்யா நமோ நமோ
புலிப்பால் ஈந்த புண்யா நமோ நமோ
சுரிகா யுதமுடைச் சுந்தரா நமோ நமோ
மஹிஷி மர்த்தனா மணிகண்டா நமோ நமோ 28

சரணம் சரணம் சபரிகிரீசா
சரணம் சரணம் சத்ய ஸ்வரூபா
சரணம சரணம் சர்வ தயாளா
சரணம் சரணம் ஸ்வாமியே சரணம் 29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமூல கணபதியை வேண்டிக்கிட்டு – நாங்க
கார்த்திகை மொதிதேதி மாலை இட்டோம் – நாங்க
ஐய்யப்பா ஐய்யப்பா என்றே சொல்லி – நாங்க
ஆறுவாரம் தானே நோன்புமிருந்தோம் – நாங்க

எங்க குருசாமி துணைகொண்டு அவர்பாதம் நம்பிக்கிட்டு
இருமுடியை சொமந்துகிட்டு வந்தோமய்யா
ஆறுபடை வீடு சென்று கந்தனையே வேண்டிக்கிட்டு
யாத்திரையாய் நடந்து வந்தோமய்யா

குருவாயூர் கோயில் முதல் கன்னியாகுமரிவரை
தரிசனமே செய்துகிட்டு வந்தோமய்யா
எருமேலிபேட்டைதுள்ளி வாவரையும் வேண்டிக்கிட்டு
பேரூர்தோட்டில் பொரிபோட்டு வந்தோமய்யா

காளைகட்டி அஞ்சல்வந்து அழுதாமலை ஏறிகிட்டு
கரிமலையின் உச்சியிலே வந்தோமய்யா
பம்பையிலே குளிச்சிப்புட்டு பாவங்களைத்தொலச்சுப்புட்டு
நீலிமலை ஏறிகிட்டு வந்தோமய்யா

பதினெட்டாம்படிதாண்டி பகவானே உனைவேண்டி
கற்பூரஜோதிதனைக் கண்டோமய்யா
மகரஜோதியைக் கண்டு மனமாரச் சரணம் போட்டு
மணிகண்டா உன்மகிமை அறிந்தோமய்யா

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யின்றி மெய்யோடு நெய்கொண்டு போனால்
ஐயனை நீ காணலாம் சபரி ஐயனை நீ காணலாம்
ஐயப்பா சுவாமி ஐயப்பா ஐயப்பா சரணம் ஐயப்பா

அவனை நீ நாடு அவன்புகழ் பாடு
புகழோடு வாழவைப்பான் ஐயப்பன் – உன்னை
புகழோடு வாழவைப்பான் ஐயப்பன்
பூஜைகள் போடு தூய அன்போடு
பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன் – நல்ல
பெயரோடு வாழவைப்பான் ஐயப்பன்
அனைவரும் வாருங்கள் ஐயனை நாடுங்கள்
அருள்வேண்டும் அன்பரை எல்லாம் வாழவைப்பான்

* * *

திம்தக்கத்தோம்திம் தகத்தோம் ஐயப்பா
தெய்வத்திலே நீ ஒருவன் மெய்யப்பா
தேடினோம் கூடினோம் கருணை செய்யப்பா
தினமும் உனை நாடினோம் சுவாமி ஐயப்பா

மார்கழியில் நாங்களெல்லாம் பேட்டைதுள்ளிடுவோம்
மலைமீது ஏறி வந்து உன்னைப்பாடுவோம்
வரிசையுடன் பம்பை நதி நீரில் ஆடுவோம்
வாவரெனும் துணைவனையும் வணங்கக் கூடுவோம்
மனதில் எமக்கு இடம் கொடுத்து உதவி செய்யப்பா
மகரவிளக்கைக் காண வேண்டும் சுவாமி ஐயப்பா
சுவாமி திம் தகத்தோம் – தோம்
ஐயப்பா திம் தகத்தோம் தோம்
சுவாமியே ஐயப்பா
சுவாமியே ஐயப்பா

கடலும் வானும் உன்னாலே காற்றும் மழையும் உன்னாலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலில் உறுதி உன்னாலே உள்ளம் செழிப்பதும் உன்னாலே
கன்னிபுரத்து மாதேவி காவலிருப்பதும் உன்னாலே
கார்த்திகை மாதம் வந்தாலே சேவா சங்கம் உன்னோடு
வாக்கும் வலிமையும்நீயப்பா வாழ்வைத் தருவாய் ஐயப்பா
வீரமும் செல்வமும் நீயப்பா வெற்றியைத்தருவாய் ஐயப்பா
சுவாமி திம்தகத்தோம் — தோம்
ஐயப்ப திம் தகத்தோம் தோம்
சுவாமியே ஐயப்பா சுவாமியே ஐயப்பா

* * *

துளசிமணி மாலைகட்டி இருமுடியும் தலையில் ஏந்தி
சபரிநோக்கி நடையை போடு கன்னிச்சாமி — அங்கே
சாஸ்தாவின் அருள் கிடைக்கும் கன்னிச்சாமி

எரிமேலி பேட்டையிலே கரிமலையில் நடக்கையிலே
எத்தனையோ இன்பமுண்டு கன்னிச்சாமி — அங்கே
நீயும்வந்து வரத்தைக்கேளு கன்னிச்சாமி

பாட்டுபாடி பஜனைபாடி பம்பாநதி தீர்த்தமாடி
காட்டுக்குள்ளே குடியிருப்போம் கன்னிச்சாமி — அதிர்
வேட்டுவைத்து வழி நடப்போம் கன்னிச்சாமி

மலையதிர சரணம் போட்டு மனமுருக பாட்டும்பாடி
அலையலையாய் நடந்து வந்தோம் கன்னிச்சாமி — அங்கு
ஆனந்த ஜோதி பார்ப்போம் கன்னிச்சாமி

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடியைச் சுமந்து வந்தேன் இரக்கமில்லையா?
இறைவா உன் சோதனைக்கோர் அளவுமில்லையா?

அழுதையிலே குளித்து வந்தேன் நீ அறியவில்லையா? –நான்
அருகேஓர் கல்லெடுத்தே வைக்கவில்லையா?
கரிமலையில் ஏறிவந்தேன் கவனமில்லையா – அந்த
கருடன்என்னைக் கண்டதாகச் சொல்லவில்லையா?

பம்பையிலே குளித்து வந்தேன் அறியவில்லையா?
பம்பாநதி போஜனம்நீ உண்ணவில்லையா?
பம்பையிலே விளக்கெடுத்தேன் நீ காணவில்லையா?
பகவானே உனக்குக்கூட ஒருசாக்ஷி தேவையா?

பதினெட்டுப் படிகளேறி வரவுமில்லையா – நான்
படித்தேங்காய் உடைத்த சப்தம் கேட்கவில்லையா?
கொடிமரத்தைச் சுற்றிவந்தேன் காணவில்லையா – அங்கே
கூடிநின்ற ஜனங்களைப் போய்க் கேட்டுப்பாரைய்யா

நெய் யபிஷேகம் செய்தேனே நினைவுமில்லையா? – உன்னை
மெய்யுருகப் பாடியதும் கேட்கவில்லையா?
ஐயா உன் சரணமென்றே கதறவில்லையா – நீ
அகிலமெல்லாம் காத்தருளும் ஜோதியில்லையா?

* * *

சுவாமியே சரணம் ஐயா தர்ம சாஸ்தாவே சரணம் ஐயா உனக்கு
அனுதினம் பூசை செய்தோம் ஐயனே அனந்த கோடி நமஸ்காரம்............
வில்லும் அம்பும் கையில் எதற்கு அந்த வாவரை நீ வெற்றி கொள்ளவோ
உந்தன் வீரவிளையாட்டுகளை பாட வாணி தடை கூறவில்லையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் எடுக்க புலியெதற்கோ — உந்தன்
பார்வையில் பால் சத்தியுள்ளதே உந்தன்
பார்வை ஒன்று போதுமையா எங்கள் மேல்
பால்பொழிய வேண்டுமையா

கொஞ்சி கொஞ்சி பேசையிலே — உந்தன் பிஞ்சு மொழி கேட்குதையா
அன்று பந்தளத்தில் செய்த தவம் இந்த பாமரன் நான் செய்யவில்லையா

காந்த மலை ஜோதி எங்களை அந்தக் காந்தம் என இழுக்குதையா
அந்த சுவாமி குரு நாதன் உருவில் இன்னும்காண அருள் செய்யவில்லையா

***

காட்டில சாமிக்கு வீடு — யானையும் புலிகளும் இருக்குது பாரு
காட்டில சாமியைப் பாடு — யானையும் புலிகளும் வழிவிடும் பாரு
நாளும் விரதம் நீயுமிருந்து பாரு போய்ப் பாரு —
பசியில கேட்டது எல்லாம் தருவாரு — எப்படித்தருவாரு — மனசில
எண்ணினமாதிரி வருவாரு

ஹரி ஓம் ஓம் ஹரி ஹர சுதனே (ஹரி)
சரணம் சரணம் சரணம் சரணம் சரணம் சரணம்

பம்பையில நீராடு பக்தியில் ஐயப்பன் பேரையும் பாடு —
சுவாமியே ஐயப்பா — ஐயப்பா சுவாமியே
கரிமலை ஏற்றம் கடினம் பாரு காலை வலிச்சா சத்தம் போட்டு
சாமிய நீ பாடு — சுவாமியே!

சபரிபீடமதைப் பாரு தெரியும் பாரு சரங்குத்தி ஆலு
போடு வேட்டு வழிபாடு போட்டா சாமி வரந்தருவாரு
படிபதினெட்டும் ஏறியும் பாரு தெரியும் பாரு
சந்நிதி பாரு — சாமியை நீ பாடு — சுவாமியே!

தேவலோகமது போல சாமியின் வீடு ஜொலிக்குது பாரு
தேவை என்ன கேட்டிடவேண்டும்,
இலாபம் வேண்டிக் கேட்டிடவேண்டாம் நியாயம் தருவாரு — சுவாமியே

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமுடி தாங்கியே செல்லுவோம்
இறைவன் ஐயப்பனைக் காணவே...............
சாமி சரணம் ஐயப்ப சரணம்
சாமியே சரணம் ஐயப்ப சரணம்

கூட்டம் கூட்டமாய் வருகிறார் – அங்கே
கூடிக்கூத்தாடிச் செல்கிறார் – அவர்
கூறும் மொழியெல்லாம் சரணமே – அந்த
கூட்டத்திலும் ஐயப்பனும் இருக்கிறான்.
பார்த்தவர் மறுபடியும் பார்க்கிறார் – அதை
பாராதவர் சபரியை நோக்கிறார் – பாராத
சபரியில் ஐயப்பன் அவரை காணவே
சபரிமலைக்கு செல்லுவோம்

எருமேலி எனும் வனத்திலே நம் இறைவன்
ஐயப்பனும் இருக்கிறார் – அவர் எதிலும் எங்கும்
இருப்பவர் அவர் எல்லா லீலைகளும் புரிபவர்

***

எங்க பகவானே தங்க பகவானே
தங்க பகவானே பொன்னு பகவானே

எங்க பகவானே தங்க சிலையானே
சரணம் சரணம் ஐயா பொன்னு பகவானே

ஹரிஹர சுதன்ஐயா எங்கபகவானே – தங்கசிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

அச்சங்கோவில் அரசனய்யா எங்கபகவானே – தங்கசிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

குளத்துப்புழை பாலனவன் எங்க பகவானே – தங்கச்சிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

வில்லாளி வீரனய்யா எங்கபகவானே – தங்கச்சிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்தள பாலனவன் எங்கபகவானே – தங்கசிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

காந்தமலை தெய்வமவன் எங்கபகவானே – தங்கசிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

சபரிமலை ஜோதிஅவன் எங்கபகவானே – தங்கசிலையோனே
சரணம் சரணம் ஐயா பொன்னுபகவானே

* * *

ஓடி வா ஐயப்பா – ஓடி வா சுவாமி – நீ
ஓடி வா ராஜா – நீ ஓடி வா கண்ணா – நீ
ஓடி வா தேவா – நீ ஓடி வா சுவாமி – அந்த
பம்பாநதி கடந்து ஓடி வா சுவாமி – அந்த
பதினெட்டாம்படி தாண்டி ஓடி வா சுவாமி – இந்த
பக்தர்களின் பஜனைக்கு ஓடி வா சுவாமி – இந்த
பக்தர்களுக்கு அருள் புரிய ஓடி வா சுவாமி – இந்த
பக்தர்களின் குறை தீர்க்க ஓடி வா சுவாமி

* * *

ஒன்றாம் திருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா – என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணம் இல்லை ஐயப்பா

(இதே போல 18ம் படி வரை பாடிய பின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியதிருப்படி சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா — என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணம் இல்லை ஐயப்பா

படி பதினெட்டும் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா — என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில்லை ஐயப்பா

படிதொட்டு வந்தனம் சரணம் பொன் ஐயப்பா
சுவாமி பொன் ஐயப்பா — என்
ஐயனே பொன் ஐயப்பா
சுவாமி இல்லாதொரு சரணமில்லை ஐயப்பா
ஓம் சத்தியமான பொன்னு பதினெட்டாம் படிகளே சரணம் ஐயப்பா

லோகவீரம் மஹா பூஜ்யம்
ஸர்வ ரக்ஷாகரம் விபும்
பார்வதீ ஹ்ருதயானந்தம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸுதம்
க்ஷிப்ர ப்ரசாத நிரதம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விப்ர பூஜ்யம் விஸ்வ வந்த்யம்
விஷ்ணு சம்போ ப்ரியம்ஸூதம்
சஷிப்ர ப்ரசாத் நிரதம்
சபஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

மத்த மாதங்க கமணம்
காருண்யாம்ருத பூரிதம்
ஸர்வ விக்ன ஹரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

அஸ்மத் குலேச்வரம் தேவம்
அஸ்மத் சத்ரு விநாசனம்
அஸ்மத் இஷ்ட ப்ரதா தாரம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

பாண்யேச வம்ச திலகம்
கேரளே கேளி விக்ரஹம்
ஆர்த்த த்ராண பரம்தேவம்
சாஸ்தாரம் ப்ரணமாம்யஹம்
சுவாமியே சரணம் ஐயப்பா

ஸ்ரீ பூத நாத சதானந்த
ஸர்வ பூத தயாபரா
ரட்ச ரட்ச மஹா பாகு
சாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ:
சுவாமியே சரணம் ஐயப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் செய்த சகல குற்றங்களையும் பொறுத்துக் காத்து ரட்சிக்க வேண்டும். ஓம் ஸ்ரீ சத்தியமான பொண்ணு பதினெட்டாம் படி மேல் வாழும் ஓம் ஸ்ரீ ஹரிஹர சுதன் – ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே – சரணம் ஐயப்பா. ஓம் காசி, ராமேஸ்வரம், பாண்டி, மலையாளம் அடக்கி ஆளும் ஓம் ஸ்ரீ ஹரிஹர சுதன் ஆனந்த சித்தன் ஐயன் ஐயப்ப சுவாமியே சரணம் ஐயப்பா.

ஓம் ஸ்ரீ ஹரிஹரசுதன் ஆனந்தசித்தன்
ஐய ஐயப்ப சுவாமியே – சரணம் ஐயப்பா

ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

தீப மங்கள ஜோதி நமோ நமோ – தூய
சபரிகிரீசா நமோ நமோ –
பூரணை புஷ்களை நாதா நமோ நமோ
அருள் தாராய்

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரும நெறி தழைத்தோங்க தாரணிக்கு அருள் சுரக்க
பருவ. முகில் தவறாது பொழிய பாரினில் வரமருள
அருள உருவமாய் "அஸ்ரல்" நவநளக் கூடமமர்ந்த
கருமாரித்தாயே நின் திருப்பாத கமலம் போற்றி போற்றி.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD. T.P. :330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org